Registerd as a News Paper
பக்கங்கள் 04
விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 31 | [13-06-93] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 115

## க. பொ. த. சாதாரணம்; பரீட்சைக் கட்டணம் நீக்கம்

க. பொ. த.சாதாரண தரப்பரீட்சையில் இரண்டாவது முறையாகத் தோற்றும் பாடசாலை மாணவர்களுக்கு பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டுமென்றிருந்த உத்தரவு ஜனாதிபதியின் தீர்மானத்தின் பிரகாரம் நீக்கப்பட்டுள்ளது என கொழும்பு பத்திரிகை தெரிவிக்கின்றது. இலவசக் கல்விக் கோட்பாட்டின் பேரிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதென உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த காலங்களில் பரீட்சைக் கட்டணத்தை செலுத்த முடியாத காரணத்தினால் அநேக பாடசாலை மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றவில்லை. பொதுவாக இப்பரீட்சைக்கு ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்றுவார்கள் என்று கல்வித் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். வரும் ஜூலை 15ஆம் திகதி இவ் வருட டிசம்பர் மாத க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி (4ஆம் பக்கம் பார்க்க)

# காவலிலுள்ள கைதிகளை பார்வையிட
# 78 சிங்களவர்கள் யாழ். வருகின்றனர்



கடலில் காவியமான

## வெள்ளி, சனி இங்கு தங்குவர்

[யாழ்ப்பாணம்]

யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் காவலிலுள்ள 38 சிங்களப் பொலிசாரையும், ஓர் இராணுவச் சிப்பாயையும் பார்வையிடுவதற்கென 78 உறவினர்களைக் கொண்ட குழு ஒன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது. எதிர்வரும் 18ஆம் திகதி யாழ். வரும் இவ் உறவினர்கள் இருதினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கிநிற்பர். இவர்களை அழைத்து வரும் பணிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டுள்ளது.

ஒரு யுத்தக் கைதியைப் பார்வையிட இரண்டு நெருங்கிய உறவினர் என்ற வகையில் மொத்தம் 78 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருட காலமாக விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் இந்த 39 யுத்தக் கைதிகளையும் அவர்கள் நெருங்கிய உறவினர்கள் பார்வையிட விடுதலைப் புலிகள் மனிதாபிமான அடிப்படையில் அனுமதி வழங்கியுள்ளனர்.

யுத்தக் கைதிகளுக்கு, அவர்கள் உறவினர்கள், உடுபுடைவைகள், தின்பண்டங்களான பிஸ்கட்டுகள், இனிப்பு வகைகள் மற்றும் சவர்க்காரம், புகைப்படங்கள் ஆகியவற்றை வழங்க அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு சர்வதேச செஞ்சிலுவைக்குழு செயலகத்திலிருந்து 17ஆம் திகதி காலை இருபஸ்கள் மூலம் திருக்கோணமலை வந்தடையும் உறவினர் குழு கப்பல் மூலம் வரும் 18 ஆம் திகதி காலை பருத்தித்துறை வந்தடையும். பின்பு அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்தடையும்.

உறவினர் யுத்தக் கைதிகளை வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை மதியமும், அதற்கு அடுத்தநாள் காலையிலும் பார்வையிட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அன்றைய தினம் சனிக்கிழமை உறவினர்கள் கொழும்பு திரும்ப உள்ளனர்.

## சாகும்வரை உண்ணாவிரதம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் சிங்கள

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்துவரும் 38 சிங்களப் பொலிசாரும் இராணு

பூர்த்தியாகின்ற போதிலும் தம்மை விடுவிப்பதற்கு அரசாங்கம் எதுவித முயற்சியும்

## எறிகணை வீச்சு

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு நேரங்களில் தொடர்ச்சியான பலத்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. [யோ]

## ஊரடங்கு நீக்கம்

[கொழும்பு]

மட்டக்களப்பின் வடபகுதிகளில் சிறிலங்கா பாதுகாப்பு படையினரால் பிறப்பிக்கப்பட்ட காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் நேற்று நீக்கப்பட்டுள்ளது என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

## புதிய முகாம்கள்

(கொழும்பு)

மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்ட நான்கு கிராமங்களில் சிறிலங்கா இராணுவத்தினர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கதிரவெளியில் 5 புலிகள் வீரச்சாவு

திருக்கோணமலை மாவட்டம் கதிரவெளியில் கடந்த வியாழனன்று காலை 6 45 மணியளவில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட மோதலில் 5 விடுதலைப் புலிகள்போராளிகளும் ஒருஆதரவாளரும் வீரச்சாவு அடைந்தனர். மேலும் இம்மோதலின் போது இராணுவத் தரப்பில்

இளமாறன்/ரமணி (மார்க்கண்டு குணசீலன் 3ஆம் வட்டாரம், கட்டை பறிச்சான், மூதூர், திருக்கோணமலை), 2ஆம் லெப்டினன்ட் முத்தையன்/கமல் (காசிப்பிள்ளை சந்திரலிங்கம் பூனகர், மூதூர், திருக்கோணமலை), வீரவேங்கை ஜெபகன்/மிரேஸ் (இராசரத்தினம் தேவராஜ்



## கடலில் காவியமான லெப். கேணல் சாள்ஸ்

கிளாலி கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது சிறிலங்கா கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த கடற்புலிகளின் கடற்தாக்குதல் படைத்தளபதி லெப்டினன்ட் கேணல் சாள்ஸ் 1985 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் முழுநேர உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டவர். 1985இல் திருமலை 2ஆம் பயிற்சி முகாமில் பயிற்சி எடுத்தவர். 1985-86இல் சிறிலங்கா இராணுவத்திற்கு எதிரான பல பதுங்கித் தாக்குதல்களில் ஈடுபட்டவர். 1986 இல் சிறிலங்கா இராணுவம் திருக்கோணமலை விடுதலைப் புலிகளின் முகாமை முறறுகையிட்டபோது எதிர்த் தாக்குதலில் ஈடுபட்டு காலில் காயமுற்றார். பின்னர் 1986 நடுப்பகுதியிலிருந்து 1987 இலங்கை-இந்திய ஒப்பந்தம்வரை திருமலைக்கான உணவு, ஆயுதம் மற்றும் போராளிகளின் போக்குவரத்து என்பவற்றிற்கு பொறுப்பாளராகவும், படகோட்டியாகவும் இருந்தவர். 1987 ஒப்பந்தத்திற்கு முன்னர் இந்தியாவிற்கும் இடையிடையே படகோட்டியாக சென்றுவந்தார். அப்போது இந்தியாவினின்றும் இலங்கைநோக்கி வந்துகொண்டிருந்தபோது ஒருநாள் சிறிலங்கா கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலின்போது இவரின் படகு முற்றாக எரிந்தது. இந் நிலையில் 17 மணிநேரம் நீந்தி மயங்கிய நிலையில் பணற்காடு கரையை அடைந்தார். அச் சம்பவத்தில் லெப்டி

(03 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களை காக்கும் பணியில் இரு புலிகள் வீரச்சாவு

கிளாலிக் கடற்பரப்பில் பயணம் செய்த பயணிகள் மீது தாக்குதல் நடாத்த முயற்சித்த சிறிலங்கா கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் கடும் மோதல் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மேற்படி கடற்பரப்பை பயணிகள் படகுகள் கடந்து சென்றுகொண்டிருந்த சமயம் சிறிலங்கா கடற்படையின் நீரூந்து விசைப்படகுகளில் வந்த கடற்படையினர் பயணிகள் மீது தாக்குதல் நடாத்த முயற்சித்தனர்.

இதைத் தடுப்பதற்காக கடற்புலிகள் கடற்படையினர் மீது தாக்குதல் நடாத்தினர். இத் தாக்குதல்இருமணிநேரம்நீடித்தது தொடர்ந்து கடற்படையினர் இழப்புக்களுடன் பின்வாங்கினர்.

இம் மோதலில் கடற்புலி லெப். கேணல் புலேந்திரன் அல்லது சாள்ஸ் [ஆனந்தராஜா தவராஜா - திருக்கடலூர் திருக்கோணமலை] கடற்புலி லெப். மகான் (நவ



லெப். மகான்

(04ஆம் பக்கம் பார்க்க)

அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருட காலமாக விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் இந்த 39 யுத்தக் கைதிகளையும் அவர்கள் நெருங்கிய உறவினர்கள் பார்வையிட விடுதலைப் புலிகள் மனிதாபிமான அடிப் ... வைகள், தின்பண்டங்களான பிஸ்கட்டுகள், இனிப்பு வகைகள் மற்றும் சவர்க்காரம், புகைப்படங்கள் ஆகியவற்றை வழங்க அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு சர்வதேச செஞ்சிலுவைக்குழு செயலகத்திலி ... குழு கப்பல் மூலம் வரும் 18 ஆம் திகதி காலை பருத்தித்துறை வந்தடையும். பின்பு அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்தடையும்.

உறவினர் யுத்தக் கைதிகளை வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை மதியமும், அதற்கு அடுத்தநாள் காலை அன்றைய தினம் சனிக்கிழமை உறவினர்கள் கொழும்பு திரும்ப உள்ளனர்.

# சாகும்வரை உண்ணாவிரதம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் சிங்கள யுத்தக் கைதிகள் இன்றுமுதல் சாகும்வரை உண்ணா விரதப் போராட்டத்தில் இறங்கவுள்ளனர்.

யுத்தத்தின்போது விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாக சிறைபிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்துவரும் 38 சிங்களப் பொலிசாரும் இராணுவச் சிப்பாய் ஒருவரும் அரசுக்கெதிரான சாகும்வரையிலான தமது உண்ணாவிரதப் போராட்டத்தை இன்று ஆரம்பிக்கின்றனர்.

தாம் சிறைபிடிக்கப்பட்டு இன்றுடன் மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகின்ற போதிலும் தம்மை விடுவிப்பதற்கு அரசாங்கம் எதுவித முயற்சியும் எடுக்காமல் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருவதைக் கண்டித்து இச் சிங்களக் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்த உள்ளனர்.

# பிரபாகரன் ஏற்காத தீர்வில் பயன் ஏதும் இல்லை

**- அஷ்ரப்**

[கொழும்பு]

இன்றுள்ள நிலையில் கிழக்கு மாகாணத்தைப் பிரிக்க வேண்டும் என்ற முடிவை கிழக்கிலுள்ள சிங்கள சிறுபான்மையினரும், முஸ்லிம் சிறுபான்மையினரும் இணைந்து எடுக்க முடியும். ஆனால் பெரும்பான்மைத் தமிழர் ஏற்றுக் கொள்ளாத பிரிவை ஏற்படுத்தினால் பிரச்சினை தீர்ந்து விடுமா? இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பிரச்சினை தீரவேண்டுமானால் யுத்தம் நிறுத்தப்படவேண்டும். இத்தீர்விற்கு பிரபாகரன் சம்மதிக்க வேண்டும். இப்பிரிவினைக்கு பிரபாகரன் சம்மதித்தால் நாமும் சம்மதமே. ஆனால் பிரபாகரன் இதனை ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டார். எனவே இச்சர்வசன வாக்கெடுப்பு பிரச்சினையை அதிகரிக்கவே உதவும்.

பிரதான எதிர்க்கட்சிகள் முதலில் வடக்குகிழக்குப் பிரச்சினை குறித்து தெளிவாக அறிந்துகொண்டு அதற்கேற்ப தீர்வை முன்வைக்கவேண்டும். அதனை விடுத்து பிரச்சினை ஏதோ இருக்க தீர்வென்று

(04 ஆம் பக்கம் பார்க்க)

### பிரிட்டன் அரசு வழங்கிய

# மருத்துவ உபகரணங்களில் ஒரு தொகுதி கிளிநொச்சிக்கு

(யாழ்ப்பாணம்)

பிரிட்டன் வழங்கிய 15 கோடி ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களின் ஒரு தொகுதி தரைமார்க்கமாக கிளிநொச்சிக்கும் மற்ற தொகுதி கப்பல் மூலமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கும் எடுத்துவரப்படஉள்ளதாக யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவ உபகரணங்கள் யாழ். போதனா மருத்துவமனைக்கு மட்டும் வரவில்லைஎன தெரிவித்த அவர், வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும் ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்கள் வந்துள்ளதாகவும் இதனாலேயே கிளிநொச்சிக்கு ஒரு தொகுதி உபகரணங்கள் செல்லவுள்ளன என்றார்.

இதில் வந்த உபகரணங்களுள் எவற்றை முதல் தடவையாக கொண்டுவர முயற்சிக்கிறீர்கள் என கேட்டதற்கு எந்த ஒரு கொள்கலனையும் உடைக்காமல் எடுத்துவரக் கூடிய வசதியில்லையென்றும், அந்த கொள்கலன்கள் உடைக்கப்பட்டே பொருள்களை கொண்டுவரவேண்டி இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த கொள்கலன்கள் உடைக்கப்படும் போது பொருள்களை ஒழுங்காக எடுத்துவருவதற்காக

(04 ஆம் பக்கம் பார்க்க)

...பட்ட நான்கு கிராமங்களில் சிறிலங்கா இராணுவத்தினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கதிரவெளியில் 5 புலிகள் வீரச்சாவு

திருக்கோணமலை மாவட்டம் கதிரவெளியில் கடந்த வியாழனன்று காலை 6 45 மணியளவில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட மோதலில் 5 விடுதலைப் புலிகள்போராளிகளும் ஒருஆதரவாளரும் வீரச்சாவு அடைந்தனர். மேலும் இம்மோதலின் போது இராணுவத் தரப்பில் பலத்த இழப்பு ஏற்பட்டதாக தெரியவருகிறது.

இம்மோதலில் லெப்டினன்ட் இளமாறன்/ரமணி (மார்க்கண்டு குணசீலன் 3ஆம் வட்டாரம், கட்டை பறிச்சான், மூதூர், திருக்கோணமலை), 2ஆம் லெப்டினன்ட் முத்தையன்/கமல் (காசிப்பிள்ளை சந்திரலிங்கம் பூனகர், மூதூர், திருக்கோணமலை), வீரவேங்கை ஜெபகன்/மிரேஸ் (இராசரத்தினம் தேவராஜ் மகிளூர்முனை, சேனைத்துறை களுவாஞ்சிக்குடி, மட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருநாள் மின் ஒளியைநோக்கி இராணுவம் ஷெல் வீச்சு

(குருநகர்)

பாசையூர், புனித அந்தோனியார் ஆலய திருநாளை ஒட்டி ஏற்பட்ட மின்குமிழ் ஒளியைக் கண்டு மண்டைதீவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8-00 மணியளவில் எறிகணை வீச்சு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மூன்று எறிகணைகளும் அரியாலை கிழக்குப் பகுதியில் வீழ்ந்து பலத்த சத்தத்துடன் வெடித்தன. குடியிருப்புப் பகுதிகளில் எறிகணைகள் வீழ்ந்து வெடிக்காத காரணத்தால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

(21)

## மக்களை காக்க மரணித்த கடற்புலிகளுக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

கிளாலி கடற்பரப்பில் பயணம் செய்யும் பொதுமக்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை சிறிலங்கா கடற்படையினருடன் இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந்த கடற்புலிகளின் கடற்படையின் தாக்குதல் படையின் தளபதி லெப்டினன்ட் கேணல் புலேந்திரன் [சாள்ஸ்] கடற்புலி லெப்டினன்ட் மகான் ஆகிய இரு போராளிகளினதும் புகழுடல்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் அஞ்சலிக்காக இன்றும், நாளையும் வைக்கப்படவுள்ளன. அத்துடன் அஞ்சலிக் கூட்டங்களும் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 8.00மணிக்கு இன்பருட்டியிலிருந்துகடற்புலி லெப். கேணல் புலேந்திரனின் புகழுடலும், கடற்புலி லெப். மகானின் புகழுடல் கல்வியங்காட்டிலிருந்தும் அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு எடுத்துவரப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படுவதுடன் அஞ்

(03 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் சில பொருள்களின் விலைகள் அதிகரிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக சிறிலங்கா அரசு மேலும் சில அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை உயர்த்தியுள்ளது.

மண்ணெண்ணை, டீசல் ஆகிய பொருள்களுடன் கோதுமை மாவின் விலையையும் அரசு அதிகரித்துள்ளது.

அது மட்டுமன்றி மின்சார கட்டணமும் 30 சதவிகிதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் அரசு இதை உறுதி செய்யவில்லை.

மேற்படி நிதியத்தில் இருந்து மற்றுமொரு பகுதி நிதி உதவியான 450 மில்லியன் ரூபாவைப் பெற்றுக்கொள்வதற்கே அரசு மேற்படி பொருள்களின் விலைகளை உயர்த்துவதற்கு முடிவெடுத்துள்ளது.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் சமூகத் திட்டங்கள் பலவற்றுக்கு ஒதுக்கப்படும் நிதியின் அளவும் குறைக்கப்படவுள்ளது.

# வரி விளம்பரம்


## புலமைப்பா சில்வகுப்பு

சங்கத்தானை யூப்பிட்டர் கல்வி நிலையத்தில் ஆண்டு 5க்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள் திறமையும் அனுபவமும் மிக்க ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன. யாழ். புதிய கல்வி நிலைய வினாத் தாள்களையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம். (5053)

## நாவல்

உலகச் சந்தையில் ஒரு பெண் — நாவல் ஆசிரியர் செ. கணேசலிங்கன். விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-6778)

## நியூ விக்ரேஸ்

எலக்ரோனிக் தொழில் நுட்ப வேலைகள் பழக விருப்புபவர்களும், வீடியோ படப்பிடிப்பு, பாடல் பதிவு, T. V, றேடியோ திருத்துவதிலும் தொழில் தெரிந்தவர்களும், பழக விரும்புபவர்களும் நேரில் விண்ணப்பிக்கவும். முன்பு விண்ணப்பித்தவர்களும் தொடர்பு கொள்ளவும் நியூ விக்ரேஸ் எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ். யாழ்ப்பாணம். (409.)

## மாணவப் பேச்சாளர்களுக்கு

பெரியார்கள், பண்டிகைகள், பொழுதுபோக்கு, செல்லப் பிராணி போன்ற பல விடயங்களில் மாணவர்களுக்கான மேடைப் பேச்சுக்கள். "என்னாலும் பேச முடியும்" ஆசிரியர் 'கோப்பாய்சிவம்'. (5107)


## இரட்டைச் சூட்டடுப்பு பாவனைமுறைபற்றி கருத்தரங்கு

விறகினைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்குடன் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட இரட்டைச்சூட்டடுப்பின்பாவனை முறை, பயன்பாடு என்பன பற்றிய விளக்கவுரைகள் கிராமிய உற்பத்திக் குழுக்கள் மற்றும் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கங்கள் என்பவற்றின் ஊடாக நடத்தப்பட்டு வருகின்றன

இவ்வகையில் புத்தூர்கௌரி மகளிர் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரியில் எதிர் வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 30 மணியளவிலும். புத்


# தோலகட்டி நெல்லிரசம்

எந்த விதத்திலும்

அதன் தொன்மையை இழக்காத

## நெல்லி இரசத்தை

வாங்கிடுவீர், பயன்பெறுவீர்.

குறிப்பு:- போலிகள் நடமாடுவதால் எங்கள் உற்பத்தியின் மூடிகளைப்பார்த்து வாங்குங்கள் அதில் தோலகட்டி புரொடக்ஸ் என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. (சி/6793)

# கொழும்பு ஸ்ருடியோ

நினைவஞ்சலி, சரமகவிக்குத் தேவையான (BLOCKS)—பழைய படங்களிலிருந்து—அந்தியேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான றபர்சில் — ஸ்ரிக்கேஸ் தேவைப்படும்போது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## கொழும்பு ஸ்ருடியோ

55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6748)


# பதவி வெற்றிடம்

கட்டைவேலி — உடுப்பிட்டி
தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவுச் சங்கம்

1. தட்டச்சாளர் (தமிழ்) 305–13

கல்வித் தகைமை: க. பொ. த. (சா/த) பரீட்சையில் தமிழ்மொழி உட்பட 6 பாடம் சித்தியும், நிமிடம் ஒன்றிற்கு 20 சொற்கள் தமிழில் தட்டெழுத்திடும் தேர்ச்சியும்.

சம்பள அளவுத் திட்டம்: 730—20 × 10—25 × 5 — 1055-ம் கூட்டுறவு ஊழியருக்கு வழங்கப்படும் படிகளும்.

வயது: 18 — 40.

2. சாரதி 312 – 13

கல்வித் தகைமை: 5-ம்வகுப்புசித்தியுடன் பஸ்/லொறி/உழவு யந்திரமும் பெட்டியும் செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம், 2 வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

சம்பள அளவுத் திட்டம்: 730—20 × 10—25 × 5 —

# தவறி விட்டது

சண்முகம் சிவசோதி (J/14 வேலணை ஆகிய எனது உலர் உணவு முத்திரை யாழ்நகரில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/6825)

# முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் மென்பானம், இனிப்பு வகை, ஜாம் ஆகியவற்றை தயாரித்து சந்தைப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கும் சகல உற்பத்தியாளர்களையும் இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்பாக இல.230, இராமநாதன் வீதியில் (பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில்) அமைந்துள்ள தொழில் துறை மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொழில்துறை மேம்பாட்டு நிறுவனம்

(சி/6821)

# கல்வி ஊக்குவிப்பு பரிசளிப்பு 1993

காரைநகர் வாரிவளவு நல்லியக்கசபை

1. இடம்:- யாழ்ரன் கல்லூரி, காரைநகர்
   காலம்:- 15-06-93 செவ்வாய் மு. ப. 11மணி
2. இடம்:- கலாநிதி தியாகராசா ம.ம.வித். (கனிஷ்டபிரிவு)
   (ஐடியல் கல்வி நிலையம், யாழ்ப்பாணம)
   காலம்:- 16-06-93புதன் மு. ப. 11மணி

பரிசில் பெறுவோர்

1. செல்வன் க. சதானந்தன் (களபூமி) பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் முதலாண்டு பரீட்சையில் (1993) 2-ம் இடம்
2. 1991 புலமைப் பரிசில் (விசேடபரீட்சை) சித்தி பெற்ற காரைநகர் மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாழ்த்துவோர்:- புதிய கல்வி நிலையம் வாரிவளவு நல்லியக்க சபையினர்.

219 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (5129)

நல்லூர் மத்திய மறுமலர்ச்சிக் கழகம்
ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம்
ஆகியன இணைந்து நடாத்தும்

# கலைவிழா

இடம் : நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை மைதான அரங்கு

காலம் : 13-06-1993 ஞாயிற்றுக்கிழமை (இன்று) பி. ப. 5.30 மணி

விழாத் தலைவர்: திரு வே. பொ. பாலசிங்கம் (ஆணையாளர், யாழ். மாநகரசபை)

பிரதம விருந்தினர்: உயர்திரு. கா. மாணிக்கவாசகர் (அரசாங்க அதிபரும், மாவட்ட ஆணையாளரும், யாழ்ப்பாணம்

சிறப்பு விருந்தினர்கள்: திரு. ஆ மகாலிங்கம்

# நினைவு கூருகின்றோம் ... 1993-06-13

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - புல்லுமலைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த -

வேல் (குமாரவேல் - கோப்பாவெளி - மட்டு)

1987 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறை- பொலிகண்டி, உப்பிங்கிணற்றடிப் பிள்ளையார் கோவிலடியில் சிறிலங்கா இராணுவத்தினரால் உலக்கையால் அடித்துக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன், மற்றும் - பலாலி - மாவிட்டபுரம் பகுதிகளில் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு மட்டு - தொப்பிக் கல்மலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய -

கேதீஸ் (— குணசேகரம் - ஏறாவூர் - மட்டு)

1990ஆம் ஆண்டு மட்டு - களுவாஞ்சிக் குடியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

தமேஸ் (—— அக்கரைப்பற்று - அம்பாறை)
குமரேசன் (பாலையடிவெட்டை - மட்டு)
மொனரா (யோகராசா பொற்செல்வன் - மண்டூர் - மட்டு)
கமலன் (இ மூர்த்தி - ராமனு - புளியங்குளம்)
தர்சன் (அப்துல்காதர் - சம்சி)

பாணமையில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

ஜோண்சன் (சற்குணம் ஜீவராசா - பொத்துவில் - அம்பாறை)
குயிலன் (—— பதுளை)

இறக்காமத்தில் சிறிலங்காவின் விசேட உதவிப்படை தடுப்புமுகாமில் வீரச்சாவெய்திய -

சாந்தன் (சண்முகம் மூத்துக்குமார் - சேனைக்குடியிருப்பு - மட்டு)

மட்டு - கும்முறுமூலையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

ஜிவ்றி (முகம்மது இலியாஸ் - மீராவோடை, 4-ம்வாட் எல்லைறோட், வாழைச்சேனை - மட்டு)
லெப். ரொமி (நாகராசா சகாதேவராசா - கொடுவாமடு - மட்டு)

அம்பாறை - கல்முனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய -

இன்பன் (—— அக்கரைப்பற்று - அம்பாறை)
கோமளராஜ் (— சந்திரசேகரம் 37ஆம் கிராமம் - அம்பாறை)
சதீஸ் (—— அக்கரைப்பற்று - அம்பாறை)

திருமலை - ஜெயபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய -

2-ம்லெப். சங்கிலி (சண்முகதாஸ் சதீஸ்குமார் - திருமலை)

திருமலை - உப்புவெளி - 3-ம்கட்டைப் பகுதியில் சிறிலங்கா காவல் நிலையத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

சுகந்தன் (விஜயநாதன் ஹோமங்கநாதன்- திருமலை)

திருமலை - கிண்ணியாப் பகுதியில் சிறிலங்கா காவல் நிலையத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

அருண் (சண்முகம் வீரசிங்கம் - பன்குளம் - திருமலை)

## இரட்டைச் சூட்டடுப்பு பாவனை முறைபற்றி கருத்தரங்கு

விறகினைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்குடன் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட இரட்டைச்சூட்டடுப்பின்பாவனை முறை, பயன்பாடு என்பன பற்றிய விளக்கவுரைகள் கிராமிய உற்பத்திக் குழுக்கள் மற்றும் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கங்கள் என்பவற்றின் ஊடாக நடத்தப்பட்டு வருகின்றன

இவ்வகையில் புத்தூர்கௌரி மகளிர் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரியில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 30 மணியளவிலும். புத்தூர் குமரகுருபரன் சி. க வ. கூ. சங்க ஏற்பாட்டில் புத்தூர் குமரகுருபரன் சனசமூக நிலையத்தில் ஞாயிறு பிற்பகல் 3 30 மணியளவிலும், ஆவரங்கால் மத்தி சி. க. வ. கூ சங்க ஏற்பாட்டில் ஞாயிறு பிற்பகல்3 30 மணியளவிலும். ஆவரங்கால் சிவகாமி ச ச நிலையத்திலும் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

## வீரவணக்க கூட்டம்

(யாழ் பாணம்)

திருக்கோணமலையில் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆம் திகதி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 2-ம் லெப்-சங்கிலி, சுகந்தன், கப்டன் ஜெகன், அருண், சீனு ஆகிய ஐந்து மாவீரர்களின் 3ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருக்கோணமலை மாவட்டத்தில் மே, யூன் மாதங்களில் வீரச்சாவைத தழுவிக் கொண்ட மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம் நாளை திங்கட்கிழமை மாலை 5 30 மணிக்கு அரியாலை வெப். செல்லக்கிளி அம்மான் வீடமைப்புத்திட்டத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு மேற்படி வீடமைப்புத்திடடத்தில் வசிக்கும் இடம் பெயர்ந்த மக்களால் நடாத்தப்படவுள்ளது.

★

6ஆம் மாசங்களில் (ஜூன் மாதம்) வீரச்சாவடைந்த வலிகாமம் கோட்டத்தின் தெல்லிப்பழை / உடுவில் வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8.00 மணிக்கு உடுவில் மான்ஸ் கல்லூரி முன்றலில் நடைபெறும்.

இவ் வீரவணக்க கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் சிறப்புரைகளும் இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

---

கட்டைவேலி – உடுப்பிட்டி

தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவுச் சங்கம்

**1. தட்டச்சாளர் (தமிழ்) 305-13**

கல்வித் தகைமை: க. பொ. த. (சா/த) பரீட்சையில் தமிழ்மொழி உட்பட 6 பாடம் சித்தியும், நிமிடம் ஒன்றிற்கு 20 சொற்கள் தமிழில் தட்டெழுத்திடும் தேர்ச்சியும்.

சம்பள அளவுத் திட்டம்: 730—20×10—25 × 5 — 1055-ம் கூட்டுறவு ஊழியருக்கு வழங்கப்படும் படிகளும்.

வயது: 18 — 40.

**2. சாரதி 312 - 13**

கல்வித் தகைமை: 5-ம்வகுப்புசித்தியுடன் பஸ்/லொறி/உழவு யந்திரமும் பெட்டியும் செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம், 2 வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

சம்பள அளவுத் திட்டம்: 730—20×10—25 × 5 — 1055-ம் கூட்டுறவு ஊழியருக்கு வழங்கப்படும் படிகளும்.

வயது: 18 — 45.

விண்ணப்பங்கள் யாவும் 21-06 93க்கு முன் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்
கட்டைவேலி—உடுப்பிட்டி
தெ. ப. பொ உ. வி கூ. சங்கம்
கரவெட்டி.

(3433)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 11 — 08 — 1918



மறைவு: 25 — 05 — 1992

பொன்னையா **வேலும்மயிலும்**

(இளைப்பாறிய அதிபர்)

திதி: 13-6-1993

எங்கள் குடும்ப ஒளி விளக்காகத் திகழ்ந்து எங்களை எல்லாம் ஆளாக்கி வாழவைத்த எம் அன்புத் தெய்வமே, ஆண்டொன்று சென்றாலும் ஆறாது எம் மனத்துயர். அகலாது உம் நினைவுகள்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
நீங்கள் காட்டிய பாதையில் பயணத்தைத் தொடரும்

உருத்திர பவனம்,
அச்சுவேலி தெற்கு.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(5133)

---

219 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (5129)

---

நல்லூர் மத்திய மறுமலர்ச்சிக் கழகம்
ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம்
ஆகியன இணைந்து நடாத்தும்

# கலைவிழா

இடம் : நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை மைதான அரங்கு

காலம் : 13-06-1993 ஞாயிற்றுக்கிழமை (இன்று) பி. ப. 5.30 மணி

விழாத் தலைவர்: திரு வே. பொ. பாலசிங்கம் (ஆணையாளர், யாழ். மாநகரசபை)

பிரதம விருந்தினர்: உயர்திரு. கா. மாணிக்கவாசகர் (அரசாங்க அதிபரும், மாவட்ட ஆணையாளரும், யாழ்ப்பாணம்

சிறப்பு விருந்தினர்கள்: திரு. ஆ மகாலிங்கம் பிரதேசச் செயலாளர், மேலதிக அரசாங்க அதிபர், நல்லூர்.
திரு. சுந்தரம் சிவகலாலா உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.
திரு. ச. நெடுஞ்செழியன் பொறுப்பாளர், த. வி. பு. கலை பண்பாட்டுக் கழகம், யாழ். மாவட்டம்.

### நிகழ்ச்சி நிரல்

★ மங்கள விளக்கேற்றல் :
★ வரவேற்புரை : கழகத் தலைவர் திரு. வ. சு. ஞானச்செல்வம் (ஜெகநாதன்)
★ தலைமையுரை :
★ ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)
★ வாழ்த்துரை : திருமதி சத்தியலட்சுமி காங்கேயன் அதிபர் யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை
★ கழகஅமைப்பாளர்உரை: திரு. க. விவேகானந்தன்
★ சிறப்பு விருந்தினர்கள் உரை:
★ பிரதம விருந்தினர் உரை:
★ நன்றியுரை : கழக பொதுச் செயலாளர்

### கலை நிகழ்ச்சிகள்

பரதநாட்டியம்: செல்வி வாசுகி ஞானச்செல்வம்
நட்டுவாங்கம் : இராஜதுரை நளாயினி
பாட்டு : செல்வன் வர்ண ராமேஸ்வரன்
மிருதங்கம் : சங்கீதரத்தினம் சி மகேந்திரன்
வயலின் : செல்வி பாக்கியலட்சுமி நடராசா சங்கீத வித்துவான்

செல்லையா மெற்றாஸ்மயில் நெறியாள்கையில்
"கண்ணகி வழக்குரை"
முல்லைத்தீவு பாங்கு ஆட்ட நாட்டுக்கூத்து

த. வி. பு கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும்
"களத்தில் காத்தான்"
சிந்து நடைக் கூத்து

ஈழநல்லூர் "மண்டலேஸ்வரன்" குழுவினர் வழங்கும்
"இன்னிசை வார்ப்புகள்"

அரங்கமைப்பு : றூவின்ஸ் நிறுவனம், நல்லூர்
ஒளி : மனோலைற்ஸ், கோப்பாய்
ஒலி : றோயஸ் சவுண்ஸ், அரியாலை
மேடைஅலங்காரம் : ஸ்ரனிஸ் மாஸ்ரர், யாழ்ப்பாணம்

அன்பளிப்பு: 100/- 50/- 25/- 15/-
சிறுவர்களுக்கு: 10/-

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

— நிர்வாகிகள்

(சி/6828)

---

அம்பாறை - கல்முனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய -
**இன்பன்** (—— அக்கரைப்பற்று - அம்பாறை)
**கோமளராஜ்** (— சந்திரசேகரம் 37ஆம் கிராமம் - அம்பாறை)
**சதீஸ்** (—— அக்கரைப்பற்று - அம்பாறை)

திருமலை - ஜெயபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய -
**2-ம்லெப். சங்கிலி** (சண்முகதாஸ் சதீஸ்குமார் - திருமலை)

திருமலை - உப்புவெளி - 3-ம்கட்டைப் பகுதியில் சிறிலங்கா காவல் நிலையத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -
**சுகந்தன்** (விஜயநாதன் ஹோமங்கநாதன்- திருமலை)

திருமலை - கிண்ணியாப் பகுதியில் சிறிலங்கா காவல் நிலையத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -
**அருண்** (சண்முகம் வீரசிங்கம் - பன்குளம் - திருமலை)
**சீனு** (சதானந்தன் கலைச்செல்வம் - கிண்ணியா திருமலை)

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவததினருடன் ஏற்பட்ட சமரின் போது வீரச்சாவெய்திய -
**கப்டன் ஜெகன்** (கணபதிப்பிள்ளை இலட்சுமணன் - பன்குளம் - திருமலை)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் கணவன் மனைவி உட்பட சம்மாந்துறை 4ஆம் கொலனி மத்திய முகாம் பகுதியைச் சேர்ந்த 19 தமிழர்கள். டி. டி. சி. தமிழ்க்கிராமம் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தைகள், பெண்கள், சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட அம்பாறை புகையிரத நிலைய வாசியான நில அளவையாளர்.

கல்லோயாவிலிருந்து- மட்டக்களப்புக்கு வரும்போது காணாமல் போன மட்டுநகர் புகையிரத நிலைய விடுதி வாசியான தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு யாழ் - வீமன்காமம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த-
**லெப். தர்சன்** (பரமேஸ்வரன் கிரிதரன் - பொன் ராசாவிளாஸ், சித்தங்கேணி - வட்டுககோட்டை யாழ்.)
**வரோதயன்/வதரன்** (கணபதிப்பிள்ளைபரணிதரன் - குலானை, துன்னாலை தெற்கு, கரவெட்டி, யாழ்.)

1992ஆம்ஆண்டு இயக்கச்சிப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த -
**பழனித்துரை** (கார்த்திகேசுகேதீஸ்வரன் - திக்குவில், முழங்காவில், நெப்பிலோ - பூநகரி)

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் காரணமாக எமைப் பிரிந்த -
**நல்லையா** (தேவராசா விஜயரஞ்சன் - கிருஷ்ணன் கோவில் வடக்கு வீதி, பொன்னாலை, சுழிபுரம் யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6826)

சிந்தனைக்கு

வெளிப்படையான போரைவிடவும், வஞ்சகமான சமாதானம் பெருங்கேடு விளைவிக்கும்,

— டேஸிட்டஸ்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## வழி இதுவல்ல...

பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒரு தீர்க்கமான முடிவுடன் செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது. இத்தெரிவுக்குழுவின் சித்தாந்தத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியாகக் கொண்ட மாகாண சபைகள் என்பதே ஆகும். இதனைக் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் கூட நிராகரித்த பின்பும் தெரிவுக்குழுவில் உள்ள பெரும்பான்மையினர் - சிங்களவர் - கைவிடுவதாக இல்லை.

மாறாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களை எவ்வாறு பிரிக்கலாம், அதற்கான வழிமுறைகள் என்ன என்பது குறித்து ஆராய்வதிலேயே இக்குழு அக்கறைகாட்டி வருகின்றது. இந்த அடிப்படையில் முதலில் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் ஒன்றின் மூலம் இவ்வாறானதொரு தீர்வுத்திட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கப்பட்டது. அரசியல் தற்கொலைக்கு ஒப்பான இவ்வாறான திட்டத்தைக் கொண்டுவர தமிழ்க்குழுக்கள் தயாராக இருக்கவில்லை.

ஆனால், தெரிவுக்குழு தனது போக்கைக் கைவிடவில்லை. தற்பொழுது தெரிவுக்குழுவிலுள்ள சிங்களக் கட்சிகள் இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்திருப்பதா? பிரிந்திருப்பதா? என்பதை கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படும் கருத்துக் கணிப்பின்மூலம் முடிவுசெய்யத் தீர்மானித்துள்ளன. ஆனால், இது சிங்களக் கட்சிகளின் பிரத்தியேகக் கண்டுபிடிப்பல்ல. இந்திய-சிறிலங்கா சமாதானஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதொன்றே.

ஆனால், இதனை அன்றே தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர் தாயகம் வடக்கும், கிழக்கும் என இரு வேறு நிர்வாக அலகுகளாகப் பிரித்தானிய ஆட்சியில்ஏற்பட்டதே ஒழிய, அதில் பிரிவினை என்பதற்கே இடமில்லை. இது பிரச்சினைக்குரிய தீர்வுமல்ல. இருப்பினும்தமிழர் தாயகத்தைஎவ்வாறேனும் துண்டாடிவிடவேண்டும் எனசிங்களப் பேரினவாதம் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கின்றது.

இதற்கு ஒரு சாட்டாக இன்று 'மக்களின் விருப்பு' எனக்கூறி கருத்துக் கணிப்பு நடத்தி, தமிழர் தாயகத்தை அபகரிக்கப் பார்க்கின்றது. இதன்மூலம் கிழக்கு மக்களின் தீர்ப்பின்படியே வடக்கு, கிழக்கு மாகாணங்கள் துண்டாடப்பட்டதாக உலகின் கண்களில் மண்ணைத் தூவிவிடப்பார்க்கின்றது.

# வேறு தொழில் அல்லது சம்பளம் சீமெந்துதொழிற்சாலை ஊழியர் மகஜர்

[கொழும்பு]

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை சேர்ந்த ஊழியர்கள் தமக்குத்தொடர்ந்தும் சம்பளம் வழங்கப்பட வேண்டும் அல்லது வேறு தொழில் ஏதாவது வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிற்கும் விஞ்ஞான கைத்தொழில் துறை அமைச்சரும் பிரதமருமான ரணில் விக்கிரம சிங்கவிற்கும் வேண்டுகோள்விடுத்து கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர்.

புத்தளம், காலி சீமெந்து தொழிற்சாலைகள் மக்கள் மயமாக்கப்படுவதனால் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் 800 ஊழியர்கள்வேலை இழக்கும் நிலை தோன்றியுள்ளதாகவும் பத்திரிகையில் வந்த செய்தியை அடுத்தே இந்த வேண்டுகோள் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்பு நாளேடு ஒன்று தெரிவிக்கின்றது.

புத்தளம், காலி சீமெந்து தொழிற்சாலையால் கிடைத்த இலாபத்திலிருந்தே இதுவரை காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழிர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வந்ததாகவும் இந்த இரண்டு சீமெந்து தொழிற்சாலைகளும் மக்கள் மயமாக்கப்படுவதனால் தொடர்ந்தும் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கான ஊதியத்தை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக முன்னர் கொழும்பு நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டமை தெரிந்ததே.

## அடையாள அட்டை குறித்து தோட்டநிர்வாகம் அசமந்தம்

### டி. வி. சென்னன் குற்றச்சாட்டு

[கொழும்பு]

ஒவ்வொரு தோட்ட நிருவாக அலுவலகத்திலும் ஐந்நூறுக்கு மேற்பட்ட அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்கள் குவிந்து கிடக்கின்றன. மலையக வாலிபர்களுக்கான ஆளடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதில் தோட்ட நிர்வாகங்கள் அசமந்தப் போக்குடன் செயற்படுவதாலேயே மலையக வாலிபர்கள் ஆளடையாள அட்டையின்றிக் கைது செய்யப்படும் நிலை தொடர்ந்து இருப்பதாக பதுளை மாவட்ட எம். பி. டி. வி. சென்னன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; சம்பந்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை துரித கதியில் அனுப்பிவைக்க தோட்ட நிர்வாகம் பணிக்கப்பட வேண்டும். அல்லது மலையக வாலிபர்கள் அடையாள அட்டையின்றிக் கைது செய்யப்படும் போது அதற்கு காரணமாய் இருக்கும் தோட்ட நிர்வாகிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்று தெரிவித்தார்.

## தோட்டத்துறை வீடமைப்பு கூட்டுறவு சங்கம் ஆரம்பம்

தோட்டத்துறை வீடமைப்பு கூட்டுறவுசங்கங்கள் தற்போது தோட்டங்கள் தோறும் அமைக்கப்பட்டு வருகின்றன.

கூட்டுறவுக் கொள்கைகளின் அடிப்படையில் பொருளாதார சமூக கலாசார நலன்களை விருத்தி செய்வதும் அங்கத்தவர்களுக்கு சிறப்பான வாழ்க்கை முறையைநடத்துவதற்கு அடிப்படையாக இருக்கும் வீட்டுத் தேவைகளை நிறைவேற்றுவதுமே இச்சங்கங்களின் நோக்கமாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த சங்கங்களின் விதிமுறைகள் செயற்பாடுகள் எதிர்காலநிலைமைகள் என்பன தொடர்பாக இ.தொ. காவும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் அரசாங்கஅதிகாரிகளோடும் உயர் மட்டத்தினரோடும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பனை அபிவிருத்தி சபையும் மக்கள் மயமாகும்

(கொழும்பு)

பனை அபிவிருத்திச் சபை மக்கள் மயப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பனை அபிவிருத்திச் சபையானது தனது பத்தாண்டு கால அபிவிருத்தி நடவடிக்கைகளில் கூட்டுறவுத்துறை, வங்கித் துறை, மக்கள் கம்பனிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவைகளை ஒன்றிணைப்பதன்மூலம் மக்கள் மயப்படுத்தும் துரித நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதற்கமைய யாழ். மாவட்டத்தில் மேற்படி சபை தனது சகல நடவடிக்கைகளையும் ஒருங்கிணைந்து வழி நடத்துவதற்கு ஏதுவாக வழி நடத்தல் குழுவை அமைத்துள்ளது.

இக்குழுவின் உறுப்பினர்களாகப் பல்வேறு துறைசார்ந்த உறுப்பினர்கள் நியமனம்பெற்றுள்ளனர்.

இக்குழுவின் வெற்றிகரமான செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு ஏனைய மாவட்டங்களுக்கும் இந்நடைமுறை விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

# காணி பகிர்ந்தளிப்புக்கு பின் மலையகம் சென்னையாகும்

- சமரவீர வீரவன்னி

(கொழும்பு)

தோட்டக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர் மலையகம் இரண்டாவது சென்னையாகிவிடும். அப்போது சிங்களவர்களுக்குக் காணி இருக்காது என்று ஊவா மாகாண சபையின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர் சமரவீர வீரவன்னி எச்சரிக்கை செய்தார்.

ஆலி எலப் பகுதியைச் சேர்ந்த அட்டாம்பிட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்;

இந்த அரசாங்கம் தேயிலைத் தோட்டங்களைத் "தனியார்மயமாக்குவதாகக்கூறி கம்பெனிகளுக்கு விற்றுவிட்டனர். இதனால் அதிகமான தோட்டங்[...] ரப்பா என்பவருக்கு உரியதாகிவிட்டன.

இன்னும் சில நாட்களில் தோட்டக் கிராமங்கள் உருவாகும். ஒவ்வொரு தோட்டத் தமிழ்மக்களுக்கும் தோட்டக் காணி 35 பேர்ச்சஸ் வீதம் பகிர்ந்தளிக்கப்படும் என்று தொண்டமான் வாக்குறுதி அளித்தமையாலேயே தமிழ் மக்கள் யானைக்கு வாக்களித்தனர். அத்துடன் கதிரைக்கோ கருடனுக்கோ வாக்களித்தால் திரும்பவும் இந்தியாவுக்குப் போக நேரிடும் என்றும் அவர்கள் கூறினர்.

நுவரெலியா மாவட்டத்தில் ஐ. தே. க சார்பில் தெரிவான பத்துப் பேரில் எட்டுப் பேர் தமிழர்கள். கண்டி நிலைமையும் அவ்வாறே. ஊவா மாகாணசபை ஐ. தே. கவிற்[...] மக்களின் வாக்குகளேகாரணம் இங்கு காணி அமைச்சர் பதவி தரப்படவேண்டுமென்று தமிழ் உறுப்பினர் வலியுறுத்துகின்றார். எதிர்காலத்தில் ஊவா மாகாணசபையில் நல்ல விளையாட்டுக்களைப் பார்க்கலாம்.

அத்துடன் பதினைந்து மாதங்களுக்கும் குறைவான ஆயுட்காலத்தைக்கொண்டிருக்கும் எமது கட்சி பத்துலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருப்பது வரலாற்றில் முக்கியவிடயமாகும். எந்தக் கட்சியும் இவ்வளவு விரைவாக மக்கள் மத்தியில் செல்லவில்லை. சுமார் 15 சதவிகித வாக்குகளை நாம் பெற்றுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களை

சலிக் கூட்டமும் இடம்பெறும். பின்னர் புத்தூர் சந்தியூடாக சுன்னாகத்திற்கு 10.30 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு சந்தைமைதானத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படுவதுடன் அஞ்சலிக் கூட்டமும் இடம்பெறும்.

பின்பு சுன்னாகத்திலிருந்து ஐந்து சந்தியை வந்தடைந்து, பொம்மைவெளி வீதியால் நாவாந்துறைக்குச் சென்று, சத்திரச்சந்தி வழியாகத் திரும்பிப் பிரதான வீதியை அடைந்து 4ஆம் குறுக்குத்தெருவால் கடற்கரை வீதிக்குச் சென்று குருநகரில் தண்ணீர்த் தாங்கி வீதியில் பி. ப. 3-00 மணிக்கு அஞ்சலிக்கு வைக்கப்படும். பின்னர் கடற்கரை வீதிவழியாகப் பாசையூரை அடைந்து புங்கங்குளம்வீதியால் பிரதான வீதியை அடைந்து 4-30 மணிக்கு கைதடி மாவீரர் பந்தலில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பின்னர் ஊர்வலமாக 6.30 மணிக்கு சாவகச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, 7.30 மணிக்கு கொடிகாமம் சந்தை மைதானத்தில் மக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு. அஞ்சலிக் கூட்டமும் நடாத்தப்பட்டு, பின்னர் கிளாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அஞ்சலிக்கு வைக்கப்படும்.

நாளை காலை 7.00 மணிக்கு செம்பியன்பற்று தனிப்பனை முகாமில் மக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, அஞ்சலிக்கூட்டம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து, மாமுனை வீதி வரை கடற்கரை வீதி வழியாகச் சென்று மாமுனைச் சந்தியிலிருந்து மருதங்கேணி - பருத்தித்துறை பிரதான வீதி வழியாக நாகர் கோவில் பாடசாலையை காலை 9.00 மணிக்குச் சென்றடையும். அங்கிருந்து காலை 10.30 மணிக்கு நெல்லியடிக்கு கொண்டு வரப்படும்.

நெல்லியடியிலிருந்து 12.30 மணிக்கு பழைய பஸ் நிலையத்தை வந்தடையும். இங்கிருந்து கடற்கரை வீதி வழியாக 4.00 மணிக்கு வல்வெட்டித்துறையில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் வடமராட்சி மாவீரர் துயிலும்இல்லத்திற்கு (எல்லங்குளம்) எடுதுச் செல்லப்பட்டு, விதைகுழியில் விதைக்கப்படும்.

## யாழ்ப்பாணச் சந்தி 'மிகிந்தலைச் சந்தி' ஆகியது

அநுராதபுரம் புறநகர்ப் பகுதியில் உள்ள அநுராதபுரம் வவுனியா வீதியில் இதுவரை காலமும் யாழ்ப்பாணச் சந்தி என்று அழைக்கப்பட்டு வந்த இடம் தற்போது மிகிந்தலை சந்தி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சந்தியிலும் மிகிந்தலையிலும் புதிய புகையிரத நிலையங்கள் அமைக்கப்பட்டதையடுத்தே இந்தப் பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள புதிய புகையிரத நிலையத்திற்கு மிகிந்தலைச் சந்தி புகையிரத நிலையம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

வில்லை.

ஆனால், தெரிவுக்குழு தனது போக்கைக் கைவிடவில்லை. தற்பொழுது தெரிவுக்குழுவிலுள்ள சிங்களக் கட்சிகள் இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்திருப்பதா? பிரிந்திருப்பதா? என்பதை கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படும் கருத்துக் கணிப்பின்மூலம் முடிவுசெய்யத் தீர்மானித்துள்ளன. ஆனால், இது சிங்களக் கட்சிகளின் பிரத்தியேகக் கண்டுபிடிப்பல்ல. இந்திய-சிறிலங்கா சமாதான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதொன்றே.

ஆனால், இதனை அன்றே தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர் தாயகம் வடக்கும், கிழக்கும் என இரு வேறு நிர்வாக அலகுகளாகப் பிரித்தானிய ஆட்சியில்ஏற்பட்டதே ஒழிய, அதில் பிரிவினை என்பதற்கே இடமில்லை. இது பிரச்சினைக்குரிய தீர்வுமல்ல. இருப்பினும்தமிழர் தாயகத்தைஎவ்வாறேனும் துண்டாடிவிடவேண்டும் எனசிங்களப் பேரினவாதம் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கின்றது.

இதற்கு ஒரு சாட்டாக இன்று 'மக்களின் விருப்பு' எனக்கூறி கருத்துக் கணிப்பு நடத்தி, தமிழர் தாயகத்தை அபகரிக்கப் பார்க்கின்றது. இதன்மூலம் கிழக்கு மக்களின் தீர்ப்பின்படியே வடக்கு, கிழக்கு மாகாணங்கள் துண்டாடப்பட்டதாக உலகின் கண்களில் மண்ணைத் தூவி விடப்பார்க்கின்றது.

ஆனால், இது உண்மையில் அம்மண்ணின் மைந்தர்களின் தீர்ப்பாக இருக்கமாட்டாது. அம்மண்ணை ஆக்கிரமித்தவர்களினதும், அபகரித்தவர்களினதும் முடிவாகவே இருக்கும். ஏனெனில் அங்கு இன்று மண்ணில் மைந்தர்கள் இல்லை, அவர்கள் தமது மண்ணைவிட்டு விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் என்பன எப்பொழுதும் சிங்களவரின் ஆக்கிரமிப்புத் திட்டங்களாகவே இருந்தன. இவ் ஆக்கிரமிப்புத் திட்டங்களின்காரணமாகக் கிழக்கு மாகாணத்தில் 1921 இல் 4.5 வீதமாக இருந்த சிங்களவர்கள், 1981 இல் 24.5 வீதமாகப் பெருகினர். இதேவேளை தமிழர்கள் 53 5 வீதமாக இருந்தவர்கள் 41.9 வீதமாகக் குறுகினர். முஸ்லிம்களும் முறையே 39 4 வீதமாக இருந்து 32.2 வீதமாகச் சுருங்கினர்.

1981 இல் இவ்வாறாயினும் இருந்த நிலை பின்னர் மிக மோசமாக வீழ்ச்சி கண்டது. தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப் படுகொலையில் பல்லாயிரக் கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர். பெருமளவு எண்ணிக்கையானோர் அகதிகளாக கிழக்கைவிட்டு வெளியேறினர். அங்கு இப்பொழுது எஞ்சியுள்ள தமிழர் வாழ்க்கை ஒரு சிறைச்சாலை வாழ்க்கை போன்று உள்ளது.

இந்நிலையில் கருத்துக் கணிப்பு நடத்துவது என்பதும், அதன்மூலம் வடக்கு.கிழக்கு மாகாணங்களை இணைப்பதா? பிரிப்பதா? என்பது குறித்து மக்களின் கருத்தை அறிவதென்பதும் வேடிக்கையான பேச்சு ஆகும். சிங்களப் பேரினவாதத்தின் இம்முடிவானது இவ்வாண்டின் சிறந்த 'ஜோக்' எனக்கூறினும் பொருந்தும்.

ஆனால் துப்பாக்கி முனையில் தேர்தல் நடத்துவதெப்படி என்பதில் சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது கற்றுத் தேறியுள்ளது. இதன்பிரகாரம் கிழக்கில் - இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில்-தேர்தலை அரசாங்கம் நடத்தலாம் உறவினர் வீட்டிற்குச் சென்று வருவதற்குச் சுதந்திரம் இல்லாத பகுதியில் நடக்கும் இத்தேர்தலை 'ஒரு சுதந்திரமான தேர்தல்' எனச் சிங்கள அரசும் கூறலாம். ஆனால், எதுஎவ்வாறு நடந்தாலும், தமிழர் தாயகத்தை பிரிப்பதென்பது இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமையப்போவதில்லை. ஆயுதப்போராட்டத்தையும் நிறுத்திவிட உதவப் போவதில்லை.

# மலையகம் சென்னையாகும்

- சமரவீர வீரவன்னி

(கொழும்பு)

தோட்டக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர் மலையகம் இரண்டாவது சென்னையாகிவிடும். அப்போது சிங்களவர்களுக்குக் காணி இருக்காது என்று ஊவா மாகாண சபையின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர் சமரவீர வீரவன்னி எச்சரிக்கை செய்தார்.

ஆலி எலப் பகுதியைச் சேர்ந்த அட்டாம்பிட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்;

இந்த அரசாங்கம் தேயிலைத் தோட்டங்களைத் தனியார்மயமாக்குவதாகக்கூறி கம்பெனிகளுக்கு விற்றுவிட்டனர். இதனால் அதிகமான தோட்டங்கள் சென்னையிலுள்ள மதுரப்பா என்பவருக்கு உரியதாகிவிட்டன.

இன்னும் சில நாட்களில் தோட்டக் கிராமங்கள் உருவாகும். ஒவ்வொரு தோட்டத் தமிழ்மக்களுக்கும் தோட்டக் காணி 35 பேர்ச்சஸ் வீதம் பகிர்ந்தளிக்கப்படும் என்று தொண்டமான் வாக்குறுதி அளித்தமையாலேயே தமிழ் மக்கள் யானைக்கு வாக்களித்தனர். அத்துடன் கதிரைக்கோ கருடனுக்கோ வாக்களித்தால் திரும்பவும் இந்தியாவுக்குப் போக நேரிடும் என்றும் அவர்கள் கூறினர்.

நுவரெலியா மாவட்டத்தில் ஐ. தே. க சார்பில் தெரிவான பத்துப் பேரில் எட்டுப் பேர் தமிழர்கள். கண்டி நிலைமையும் அவ்வாறே. ஊவா மாகாணசபை ஐ. தே. கவிற்குக் கிடைப்பதற்கும் தமிழ் மக்களின் வாக்குகளேகாரணம். இங்கு காணி அமைச்சர் பதவி தரப்படவேண்டுமென்று தமிழ் உறுப்பினர் வலியுறுத்துகின்றார். எதிர்காலத்தில் ஊவா மாகாணசபையில் நல்ல விளையாட்டுக்களைப் பார்க்கலாம்.

அத்துடன் பதினைந்து மாதங்களுக்கும் குறைவான ஆயுட்காலத்தைக்கொண்டிருக்கும் எமது கட்சி பத்துலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருப்பது வரலாற்றில் முக்கியவிடயமாகும். எந்தக் கட்சியும் இவ்வளவு விரைவாக மக்கள் மத்தியில் செல்லவில்லை. சுமார் 15 சதவிகித வாக்குகளை நாம் பெற்றுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒருங்கிணைந்து வழி நடத்துவதற்கு ஏதுவாக வழி நடத்தல் குழுவை அமைத்துள்ளது.

இக்குழுவின் உறுப்பினர்களாகப் பல்வேறு துறைசார்ந்த உறுப்பினர்கள் நியமனம்பெற்றுள்ளனர்.

இக்குழுவின் வெற்றிகரமான செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு ஏனைய மாவட்டங்களுக்கும் இந்நடைமுறை விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

கிருந்து காலை 10.30 மணிக்கு நெல்லியடிக்கு கொண்டு வரப்படும்.

நெல்லியடியிலிருந்து 12.30 மணிக்கு பழைய பஸ் நிலையத்தை வந்தடையும். இங்கிருந்து கடற்கரை வீதி வழியாக 4.00 மணிக்கு வல்வெட்டித்துறையில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் வடமராட்சி மாவீரர் துயிலும்இல்லத்திற்கு (எல்லங்குளம்) எடுத்துச் செல்லப்பட்டு, விதைகுழியில் விதைக்கப்படும்.

## யாழ்ப்பாணச் சந்தி 'மிகிந்தலைச் சந்தி' ஆகியது

அநுராதபுரம் புறநகர்ப் பகுதியில் உள்ள அநுராதபுரம் வவுனியா வீதியில் இதுவரை காலமும் யாழ்ப்பாணச் சந்தி என்று அழைக்கப்பட்டு வந்த இடம் தற்போது மிகிந்தலை சந்தி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சந்தியிலும் மிகிந்தலையிலும் புதிய புகையிரத நிலையங்கள் அமைக்கப்பட்டதையடுத்தே இந்தப் பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள புதிய புகையிரத நிலையத்திற்கு மிகிந்தலைச் சந்தி புகையிரத நிலையம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## சபாநாயகருக்கு சலுகை அதிபர் யெல்ட்சின் இணக்கம்

(மொஸ்கோ)

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் புதிய அரசியலமைப்பிற்காக ரஷ்ய சபாநாயகர் ருஷ்லான் கஷ்விலட்டோவ் வரைந்துள்ள வாசகங்களைப் பரிசீலிக்க முன்வந்ததன் மூலம் அவருக்கு பெருமளவு சலுகைகளை அளித்துள்ளாரென கூறப்படுகின்றது.

எனினும் ரஷ்யாவின் அரசியலமைப்பை திருத்துவதற்கான பாராளுமன்றக் கூட்டத்தொடரின் முழுஅமர்வு நேற்று முன்தினம் இடம் பெற்றபோது அதில் கஷ்புலட்டோவ் கலந்து கொள்ளவில்லை. அவரது உடல்நலம்சரியாக இல்லாமையே இதற்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

அணு ஆயுத பரவல் தடுப்பு

## உடன்பாட்டிலிருந்து விலகல் வடகொரியா கைவிட்டது

[சியோல்]

அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்வது என்ற அறிவிப்பை வடகொரியா கைவிட்டுள்ளது

அமெரிக்க- வடகொரிய சிரேஷ்ட அதிகாரிகளுக்கிடையே தலைநகர் சியோலில் நேற்று முன்தினம் முடிவடைந்த பேச்சுவார்த்தைகளின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அணுசக்தி நிலையங்களால் தனது அணுசக்தி நிலையங்கள் பரிசோதிக்கப்படுவதை விடவும் அணுவாயுத பரவல் தடுப்பு உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்வதே சிறந்தது எனக் கருதிய வடகொரியா கடந்த மார்ச் 12இல் இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகப் போவதாக அறிவித்தது. இதற்கான காலக்கெடு நேற்றுடன் முடிவடைய இருந்த நிலையில் வடகொரியா அணுவாயுத பரவல் தடுப்பு உடன்பாட்டிலிருந்து விலகிக் கொள்வதைத் தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அறிவிப்பின் மூலம் அமெரிக்க வட கொரிய பேச்சுக்கள் மேலும் தொடரும் என்று நம்பப்படுகின்றது.

ராஜீவ் காந்தியின் கொலைக்கு

## சுப்பிரமணியம்சுவாமி பொறுப்பேற்க வேண்டும்

எஸ். டி. சோமசுந்தரம் கருத்து

[சென்னை]

ராஜிவ்காந்தி கொலை செய்யப்பட்டமைக்கான பொறுப்பை ஜனதாக்கட்சியின் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமிதான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தமிழக வருவாய்த் துறை அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சோமசுந்தரம் மேலும் கூறுகையில்; ஜனதா தலைவர் டாக்டர் சுப்பிரமணியம்சுவாமி மத்திய அரசில் அமைச்சராக இருந்த போதும், தமிழ் நாட்டில் ஜனாதிபதி ஆட்சி நடந்த போதும் தான் ராஜிவ்காந்தி கொல்லப்பட்டார். இந்த வகையில் இந்தக் கொலைக்கான பொறுப்பையும்சுப்பிரமணியம் சுவாமியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# காஷ்மீர் போராளிகளுடன் பேச்சு நடத்த தயார்

## மத்தியஉள்துறை இணையமைச்சர் அறிவிப்பு

[டில்லி]

ஜம்மு - காஷ்மீரில் தவறுதலாக வழிகாட்டப்பட்டுவிட்ட இளைஞர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் கூறியுள்ளார்.

ராஸ்கோட்டா பகுதியில்நடந்த துப்பாக்கிச்சூட்டு நிகழ்ச்சியின் பொன்விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் மேலும் கூறுகையில்; இந்த இளைஞர்களுக்கு மறுவாழ்வு அளிக்க சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் இளைஞர்களைத்தூண்டிவிட்டு காஷ்மீரில் வன்முறைக்கு உடந்தையாக இருக்கின்றது என்று குறிப்பிட்ட திரு. பைலட் அரசு இளைஞர்களைத் தேசியநீரோட்டத்தினுள் கொண்டுவர கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்தார். மாநிலத்தின் பொருளாதாரம் சீர்குலைந்து போய் இருக்கின்றது என்றும் கூறினார்.

கடலில் காவியமான ...

னண்ட் முகமது (பொலிகண்டி) வீரச்சாவு அடைந்தார். 1988 இல் இந்தியாவிற்கு சிகிச்சைக்காகச் சென்றார். 1989இல் மணலாற்றில் பிரதான படகோட்டியாக செயற்பட்டு உணவு, ஆயுதம், போராளிகள் போக்குவரத்து என்பவற்றை திறம்படச்செய்தார். பின்னர் மணலாறு பயிற்சி முகாம்களில் ஆசிரியராகவும் சிறந்து விளங்கினார். 1990 ஜுலை மாதம்வரை மணலாற்றில் பணியாற்றிவிட்டு யாழ்ப்பாணம் வந்து வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகியவற்றில் உள்ள பயிற்சி முகாம்களில் ஆசிரியராக விளங்கினார்.

1990 ஒக்டோபரில் கடற்புலிகளில் இணைந்தார். 1991 நயினாதீவிலிருந்து காரைநகர் நோக்கி ரோந்து சென்ற படகு மீதான தாக்குதலின் போது கடற்புலிகளின் படகில் கொமாண்டராக செயற்பட்டார். இதன் போது எதிரியின் ஏ. கே. எல். எம். ஜி ஒன்று கைப்பற்றப்பட்டது.

1991 மார்கழியில் கிளாலி கடற்பரப்பில் ஆனையிறவுக்கும் பூநகரிக்கும் இடையில் ரோந்து சென்ற நீரூந்து விசைப் படகு மீதான தாக்குதலுக்கு பொறுப்பாளராக முழுப் பங்கேற்று செயற்பட்டவர்.

1992,மாசியில் தாழையடிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையின் சவட்டன் படகு மீதான தாக்குதலில் பொறுப்பாளராகச் சென்றார். இத்தாக்குதலில் காலில் காயமடைந்தார்.

பின்னர் கிளாலிக் கடற்பரப்பில் பொதுமக்கள் பாதுகாப்பின் போது நீரூந்து விசைப்படகுகளுடனான பல தாக்குகளுக்கு தலைமைப் பொறுப்பாளராகச் செயற்பட்டவர்.

இவர் கடற்புலிகளின் வளர்ச்சியில் முக்கிய பங்கெடுத்து அரும்பாடு பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்

## ஸ்கந்தபுரம்-கோணாவில் பாலம் திறப்பு விழா

அக்கராயன் வட்டத்திலுள்ள ஸ்கந்தபுரம் - கோணாவில் இணைப்பு ஆற்றிற்கு 40 அடி நீளமான பாலம் அமைக்கப்பட்டு கடந்த வியாழனன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அன்று பிற்பகல் 3-30 மணியளவில் தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் இப்பாலத்தினை திறந்து வைத்தார்.

பாலத் திறப்பு விழாவில் 500க்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விடுதலைப்புலிகள் உறுப்பினர்களினதும் அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களினதும் உரைகள் இவ் விழாவில் இடம்பெற்றன.

இப் பாலத்தினை அப்பகுதி மக்களும் விடுதலைப்புலிகளும் இணைந்து அமைத்திருந்தனர்.


பாரம்பரிய கலையை பாதுகாப்போம்

தமிழீழத்தின் தேசியக்கலை

தமிழீழத்தின் நாட்டுக்கூத்து வடிவமே

நாட்டுக் கூத்துக்களில் பல ரசிகர்களினாலும் பாராட்டி தனிச்சிறப்புப்பெற்று பொய்மை, உண்மை, காதல், வீரம், சோகம், சத்தியம், ஆடல், பாடல், ஒப்பாரி ஒன்று சேர்ந்து விறுவிறுப்புடன் மக்கள் மனதைக் கவர்ந்த கவர நிற்பதுதான்:

"கண்ணகி வழக்குரை"

''முல்லைத்தீவு ஆட்டநாட்டுக் கூத்து''



தயாரிப்பு, ஆட்டப்பயிற்சி, நெறியாள்கை

செல்லையா மெற்றாஸ்மயில்; பீ.ஏ. (சிறப்பு)

மிருதங்கம் - சங்கீதரத்தினம் திரு சி. மகேந்திரன்.

ஆர்மோனியம்: அரியாலையூர் -பொன்னுத்துரை

உடை, ஒப்பனை : ஸ்ரனிஸ் மாஸ்ரர்.

நல்லூர் மறுமலர்ச்சிக் கழக

கலை விழாவில் இடம் பெறுகிறது.

காலம்:- 13.6.93 இன்று பி.ப. 8.00 மணி

இடம்:- நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:

வாழ்த்துகின்றோம்.

கலை வர்த்தக கல்லூரி (C.C.A)

ஆசிரியர் - மாணவர்கள்

[சி-6829]


## கணித பாடத்தில் விசேட செயலமர்வு

1991, 1992இல் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியின்மையால் தொடர்ந்து உயர் வகுப்புகளில் கற்கமுடியாதிருக்கும் மாணவர்களுக்கான முதலாவது அமர்வு நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தில ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி செயலமர்விற்கு நேரிலும், தபால் மூலமும் விண்ணப்பித்த சகல மாணவர்களையும் அன்றையதினம் தவறாது சமுகமளிக்குமாறும், ஆரம்ப நிகழ்வில் ஆர்வமுடைய பெற்றோர்களும் கலந்து கொள்வதன் மூலம் தங்கள் பிள்ளைகளை ஊக்குவிக்குமாறும் கேட்கப்படுகின்றனர்.

### மக்களை

ரட்ணம்தவராஜா-சாளம்பைக்குளம் வவுனியா] தற்போதைய முகவரி: கலைமகள்வீதி, நல்லூர் வடக்கு. நல்லூர் ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர் இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### மருத்துவ

மூன்று அதிகாரிகள் இங்கிருந்து கொழும்பு செல்லவுள்ளதாகவும் வந்த கொள்கலன்களிலிருந்து ஒரு தொகுதி உபகரணங்கள் தரைமார்க்கமாக கிளிநொச்சிக்கு செல்ல, மற்ற தொகுதி உபகரணங்களையே இங்கு எடுத்துவரவுள்ளதாகவும் தெரிவித்த அவர், வந்த உபகரணங்கள் எவற்றையும் தாம் வேறு எந்த ஒரு மருத்துவமனைக்கும் மாற்றமாட்டோமென சுகாதார அமைச்சு தனக்கு உறுதி அளித்ததாகவும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மின்பிறப்பாக்கிகளை கழற்றிக் கொண்டுவராமல் அதை அப்படியே எடுத்துவர இருப்பதாகவும், உபகரணங்களை எடுத்துவர இரண்டு கப்பல் தேவை என்பதால் உடனடியாக எல்லாவற்றையும் எடுத்துவரக்கூடிய சாத்தியம் இல்லையெனவும் தெரிவித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 12-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9804

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 42 9220, | 27-7263, | 28-5294, | 41 9659 | 24-5529 |
| 24-7628, | 27-9365, | 28-9249, | 26-5962, | 26-0989 |
| 42-9325, | 22-8075, | 27-4162, | 42-0526 | 26-2737 |
| 26-4648, | 43-3576, | 26-7627, | 26-1321 | 26-5281 |
| 26 4610, | 40-1737 | 26-0852, | 26-1791 | 26-6075 |
| 41-9167, | 24-2545, | 41-2509 | 26-4683, | 26-1089 |
| 26-5491 | 40-4429, | 24 9645 | 24-5461, | 26-7068 |
| 26-3962 | 24-5679, | 26-5206 | 28-2829, | 24-3258 |

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 24-5877, | 26 9797, | 28-9186, | 28-1928 | 41-9175 |
| 26-9626, | 26-0382, | 42-3114 | 24-4636, | 41-9038 |
| 24-5703, | 24-4361, | 26-9992 | 24-4292, | 28-6853 |

## தற்கொலை

(குருநகர்)

மனக்கவலை காரணமாக வயோதிபர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலைசெய்து கொண்ட சம்பவமொன்று கடந்த புதனிரவு யாழ். வண்ணை கேசாவில் வீதி வீடொன்றில் நடைபெற்றது.

இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவர் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தசாமி (வயது 70) என்பவராவார். (21)

## அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் பலரின் பாதுகப்புகளை இரட்டிப்பாக அதிகரிப்பது என்றுபாதுகாப்பு அமைச்சு முடிவுசெய்துள்ளது. புலிகளின் தற்கொலைப்படை பிரிவொன்று கொழும்புக்குள் ஊடுருவியிருப்பதாகக்கூறப்படுவதையடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் அரசியல் வாதிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் நடமாட்டங்களும்மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

### பிரபாகரன்

வேறொன்றை முன்வைப்பது பிரச்சினையை தீர்க்க உதவாது இதனைத்தான் இன்று ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் செய்ய முனைகின்றன

நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டத்தில் தமிழ்க் கட்சிகள் கலந்து கொள்ளவில்லை. முஸ்லிம் கட்சிகள் கலந்துகொள்ளவில்லை. தொண்டமானின்கட்சி கலந்து கொள்ளவில்லை. சிங்கள கட்சிகள் சேர்ந்து இந்த முடிவை எடுத்துள்ளன. தமிழரை புறக்கணித்து அவர்கள் மீது எந்த தீர்வையும் திணிக்க

## கதிரவெளியில் வீரமரணமானோர்



லெப். இளமாறன் (ரமணி)



2-ம்லெப். முத்தையன் (கமல்)



வீரவேங்கை ஜெபகன் (பிரேஸ்)



வீரவேங்கை சுதர்மன்



வீரவேங்கை ஆஞ்சனேயன் (சந்துரு)

திருமலை மாவட்டம் கதிரவெளியில் 10-6-93 அன்று வீரச்சாவடைந்த வேங்கைகள். இம் மோதவில் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவடைந்தார்.

செல்லையா பெற்றாஸ்மயில்; பி.ஏ. (சிறப்பு)

மிருதங்கம் - சங்கீதரத்தினம் திரு சி. மகேந்திரன்.
ஆர்மோனியம்: அரியாலையூர் -பொன்னுத்துரை
உடை, ஒப்பனை : ஸ்ரனிஸ் மாஸ்ரர்.

**நல்லூர் மறுமலர்ச்சிக் கழக**
**கலை விழாவில் இடம் பெறுகிறது.**

காலம் :- 13.6.93 இன்று பி.ப. 8.00 மணி
இடம் :- நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:
வாழ்த்துகின்றோம்.
**கலை வர்த்தக கல்லூரி (C.C.A)**
ஆசிரியர் - மாணவர்கள்

[சி-6829]

## 12-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9804
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 42 9220, | 27-7263, | 28-5294, | 41 9659 | 24-5529 |
| 24-7628, | 27-9365, | 28-9249, | 26-5962, | 26-0989 |
| 42-9325, | 22-8075, | 27-4162, | 42-0526 | 26-2737 |
| 26-4648, | 43-3576, | 26-7627, | 26-1321 | 26-5281 |
| 26 4610, | 40-1737 | 26-0852, | 26-1791 | 26-6075 |
| 41-9167, | 24-2545, | 41-2509 | 26-4683, | 26-1089 |
| 26-5491 | 40-4429, | 24 9645 | 24-5461, | 26-7068 |
| 26-3962 | 24-5679, | 26-5206 | 28-2829, | 24-3258 |

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 24-5877, | 26 9797, | 28-9186, | 28-1928 | 41-9175 |
| 26-9626, | 26-0382, | 42-3114 | 24-4636, | 41-9038 |
| 24-5703, | 24-4361, | 26-9992 | 24-4292, | 28-6853 |

# கோடி அற்புதர் என்று ஒருதரம் சொன்னால் ஓடிமறையும் துன்பமெல்லாம்

ஒரு பங்கில் நடு நாயகமாக விளங்குவது கோவில், 'கோவில்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்' 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' போன்ற மூதுரைகள் எம்மக்கள் மத்தியில் விளங்கும் ஓர் அடிப்படைக் கருத்தை வலியுறுத்துகின்றன. தன்னியல்பிலேயே மனிதன் கடவுள் பற்றும் பிடிப்பும் உடையவன். ஆகவே அன்பு உணர்வால் உந்தப்பட்டு, புனித அந்தோனியார் வழியாக இறைவனை வழிபட ஏற்ற ஓர் ஆலயத்தை நிறுவி, திருவழிபாட்டு விழா எடுத்து வந்தனர். எம் முன்னோர்.

யாழ். குடாநாட்டின் தென் பகுதியில் நெய்தல் நிலப்பகுதியில் அழகே உருவாக கெம்பீரமாக தலை நிமிர்ந்து நிற்கும் ஓர் ஆலயம் உண்டென்றால் அதுதான் பாஷையூராம் எம்பதியிலே அருள்மழை பொழிய எழுந்தருளியிருக்கும் புனித அந்தோனியார் ஆலயமாகும். இவ்வாலயம் இப்பங்கு மக்களின் விசுவாசத்தைப் பிரதிபலிப்பது மாத்திரமல்ல ஒரு சமுதாயத்தின் ஆன்மீக ஒழுக்க உயர்வை எடுத்துக் காட்டும் அளவு கோலாகவும் அமைகிறது.

கடலைக் கண்ணோக்கிப் பிழைக்கும் எம்மவர் தொழில் வளம் பெருகச் செய்கிறார் புனிதர். அந்தோனி எனும் நாமம் தங்களுக்கு தஞ்சம் என்பதை உணர்ந்தவர் போலும் எம் ஊர் மக்கள், குடும்பத்தில் வாழையடி வாழையாக இப் புனித பெயரால் பிள்ளைகளை அழைக்க மறப்பதில்லை.

பிரதி செய்வாக்கிழமை தோறும் புனிதரை வழிபட பக்தர் குழாம் மடைதிறந்த வெள்ளம் போல வருவது இப் புனிதருக்கும் அவர் எழுந்தருளியிருக்கும் இப்பங்குக்கும் பெரும் சிறப்பையளிக்கிறது.

புனிதர் போதிக்கும் தாழ்ச்சி பொறுமை, கற்பு, மனக் கட்டுப்பாடுடனான சீவியம், திடகாரிக்கமான கிறிஸ்துவ மனஉறுதி எனும் புண்ணிய நெறிகளில் அவரின் உதவியை இறைமகன் யேசுவின் அருளுடன் கேட்டு நிற்கிறார்கள்.

புனித அந்தோனியார் உயிர் கிறிஸ்துவுக்கும், உடல் மண்ணுக்கும் என்று சீவித்தமையால் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்



தெய்வமாக போற்றப்படுகிறார்' தேவதாயும் வளர்ப்புத் தந்தை சூசையும் யேசுவைக் கையிலேந்தும் பாக்கியம் பெற்றவர்கள்.

**பாஷையூர்**
**புனித**
**அந்தோனியார்**
**ஆலய**
**வருடாந்த உற்சவம்**

இப் புனிதரின் கைகளிலே பாலகன் யேசு தேடி வந்து உறைந்தார். யேசு பிரான் தம்மை மகிமைப்படுத்த இப் புனிதரை தெரிந்தெடுத்தது மிகப் பொருத்தமானதென்பது வெள்ளிடைமலை. லீலி மலருடன் யேசுவுடனும் காட்சியளிக்கும் இம் மனித குல மாணிக்கத்தின் புகழ் உலகுள்ளவரையும் போற்றப்படுவதாக.

(சி-6830)


**வீரசிங்கம் ஸ்ரோர்ஸ்**
கடற்கரை வீதி,
பாஷையூர்.

**றூபேஸ் காட்வெயர்ஸ்**
கடற்கரை வீதி,
பாஷையூர்.

**ஜீவா ஸ்ரோர்ஸ்**
3 ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர்.

**ம. ராஜன்**
**பரிஷ் ஹோட்டல்**
கடற்கரை வீதி, பாஷையூர்.

**சிசில் பேக் ஹவுஸ்**
கடற்கரை வீதி,
பாஷையூர்.

**புனித அந்தோனியார்**
வியாபார நிலையம்
பாஷையூர்.

**லக்கி ஸ்ரோர்ஸ்**
சென்-செபஸ்ரியன் வீதி,
பாஷையூர்.

**பி. இக்னேசியஸ்**
சென். அன்ரனிஸ் வீதி,
பாஷையூர்.


மற்றும் முக்கிய பிரமுகர்களின் நடமாட்டங்களும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

### பிரபாகரன்

வேறொன்றை முன்வைப்பது பிரச்சினையை தீர்க்க உதவாது இதனைத்தான் இன்று ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் செய்ய முனைகின்றன

நேற்று முன்தினம் இடம் பெற்ற பாராளுமன்ற தெரிவுக் குழுக் கூட்டத்தில் தமிழ்க் கட்சிகள் கலந்து கொள்ளவில்லை. முஸ்லிம் கட்சிகள் கலந்து கொள்ளவில்லை. தொண்டமானின் கட்சி கலந்து கொள்ளவில்லை. சிங்கள கட்சிகள் சேர்ந்து இந்த முடிவை எடுத்துள்ளன. தமிழரை புறக்கணித்து அவர்கள் மீது எந்த தீர்வையும் திணிக்க முடியாது என்று கூறினார்.

### புதிய

முகாம்களை அமைத்து வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மட்டக்களப்பின் வடபகுதியில் அமைந்துள்ள மாங்கேணி, கதிரவெளி, புலிபாய்ந்தகுளம், வாகரை ஆகிய பகுதிகளிலே இவ்வாறு சிறிலங்கா இராணுவத்தினர் முகாம்களை அமைத்து வருகின்றனர் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இரண்டு தினங்கள் இடம்பெற்ற மோதலில் 3 படையினர் பலியாகியதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

### கதிரவெளியில்

டக்களப்பு) வீரவேங்கை சுதர்மன் (முத்துலிங்கம் செல்வராஜ் குருமண்வெளி, களுவாஞ்சிகுடி, மட்டக்களப்பு) வீரவேங்கை ஆஞ்சனேயன் (சந்துரு (ஜோன் தேவசகாயம் களுவங்கேணி, மட்டக்களப்பு) ஆகியோரே வீரச்சாவு அடைந்த போராளிகளாவர். அத்துடன் ஆதரவாளர் ஜீவன் [64 ஆம் கட்டை, மூதூர்] என்பவரும் வீரச்சாவு அடைந்தார். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### க. பொ. த.

திகதி என பரீட்சை ஆணையாளர் ஆ தர் வெ தமுல்ல தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளினூடாகவும் தனியார் பரீட்சார்த்திகள் நேரடியாகவும் இத் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாரத்தில் மாதிரி விண்ணப்பப்படிவம் பத்திரிகைகளில் பிரசுரமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



வரவேங்கை
ஆஞ்சனேயன் (சந்துரு)

**திருமலை மாவட்டம் கதிர வெளியில் 10-6 93 அன்று வீரச்சாவடைந்த வேங்கைகள். இம் மோதவில் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவடைந்தார்.**

## மரண அறிவித்தல்கள்

### P. M. ஞானப்பிரகாசம்

(இளை. ஆசிரியர், சமாதான நீதிபதி, பண்டிதர், கவியரசன்)

மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், படித்தமகளிர் திட்டம், மிருசுவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான பிலிப்பு மூத்ததம்பி ஞானப்பிரகாசம் அவர்கள் [12 06-93] சனிக்கிழமை பி.ப. 2 45 மணியளவில் காலமானார். இவர் காலஞ்சென்ற ஆரோக்கியம் அவர்களின் அன்புக்கணவரும், எட்வேட் துரைராஜா [இளைப்பாறிய பிரதம லிகிதர், மின்சார இலாகா], இராஜயோகம் ஆங்கில ஆசிரியர் [கணேச வித்தியாலயம், எழுது மட்டுவாள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதிகள் ஞானசோதி, குலபூஷணம் ஆகியோரின் மாமனாரும், விஜி, விஜிதா, பிறேமலதா, பிறேமகாந்தன், பிறேமராஜன், பிறேமதர்சினி, பிறேமசந்திரிகா, பிறேமதாஸ் ஆகியோரின் பேரனுமாவார். இறுதிச் சடங்குகள் இன்று (13-06-93) மாலை 4.00 மணிக்கு நடைபெற்று மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் நடைபெறும்.

65, படித்த மகளிர் திட்டம்
மிருசுவில்.
[5135]

தகவல்;
ஞா. இராஜயோகம்
[மகன்]

### திரு. முருகேசு சுப்பிரமணியம்

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் நாவற்காடு, வரணியில் வசித்தவருமான திரு. முருகேசு சுப்பிரமணியம் அவர்கள் 12 - 6 - 1993 சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற திருமதி சின்னம்மாவின் கணவரும், கணேசமூர்த்தி, கமலாம்பிகை, யோகாம்பிகை, குகமூர்த்தி ஆகியோரின் தந்தையும், திருமதி பத்மாவதி, திரு சண்முகலிங்கம், திரு. சுப்பிரமணியம், திருமதி டில்லிமலர் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 13-06-1993 (ஞாயிறு) ஒருமணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாவற்காடு,
வரணி.

தகவல்:
சுப்பிரமணியம் கணேசமூர்த்தி

(5136)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.